[18th July 1964

தான் 'ஸர்வ்' ஆகும், ஆகவே அவசியமில்லை என்று கருதி 'டிராப்' செய்யப்பட்டது. மேற்கொண்டு இதை டிஸ்டிரிக்ட் டெவலப் மெண்டு கவுன்சிலும் 'ரெகமண்டு' செய்யவில்லை. அந்த லிஸ்டில் இது இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது இரண்டு கிராமங்களுக்குத் தான் இது பயன்படும் என்று கூறினார்கள். அம்மாதிரி இல்லை. 18 கிராமங் களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 10,000 ஜனத்தொகைக்கு இது பயன் படும். அந்தப் பகுதியில் வசிக்கும் ஜனங்கள் வத்தக்குண்டுக்கு 18 மைல் சுற்றிவர வேண்டும். விவசாயப் பொருள்களைக் கொண்டு வரவேண்டும். 18 மைல் நடந்து வர முடியாது. இந்தப் பாலம் இந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன்படும். தயவு செய்து இதை மீண்டும் பரிசிலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்த பாலத்தை எடுத்துக்கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா ?

MR. SPEAKER : The Hon. Minister will consider the request of the hon. Member.

*539 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி தாலூகாவிலுள்ள சின்னாற்றுக் குறுக்கே பாலக் கோடு-பென்ரம்பட்டி ரோட்டில் மேம்பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்தப் பாலம் எப்பொழுது கட்ட துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத் தில் பாக்கியுள்ள 'ஸ்பில் ஓவர்' திட்டங்கள் முடிந்தவுடனே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் இவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

*540 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நாகை தாலுக்காவில் ஓடும் பாண்டவையாற்றின் குறுக்கே ஆந்தைக் குடியிலிருந்து சிகார் ரோட்டை இணைக்க பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆந்தைக்குடி-வலிவலம் காலையில் 0/3 மையில் பாண்டவையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேலைக் கான டெண்டர் இப்போதுதான் முடிவு செய்யப்பட்டு, வேலையை

மேற்கொள்வதற்கான உத்தரவும் சென்னை வட்டார (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்) மேற்பார்வைப் பொறியாளரால் சம்பந்தப்பட்ட காண்டிராக்டருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடம் கடன் தொகையை வசூலித்தல்

***541 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்ட கிராமங்களிலும், இதர கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்கிய கடன்களை கொடுப்பதற்கு இயலாத நிலையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த ஆண்டு வசூலை ஒத்தி வைக்கக்கோரி கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தை கேட்டிருக்கிறார்களா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) இல்லை.

(இ) எழாது.

திரு. மா. இராசாங்கம் : வருவாயற்ற காலத்தில் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வாங்கப்பட்ட கடன்கள் வசூலிக்கப்படுவதால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். வருவாய் உள்ள காலத்தில் கடனை வசூலிக்க சர்க்கார் ஏதாவது உத்தரவிடுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : வருவாய் காலத்தில் தான் வசூலித்துக்கொண்டிருக்கிறோம் 'ஷார்ட் டேர்ம் லோன்' என்று சொல்வது அது தான்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த வருஷம் தஞ்சாவூர் ஜில்லாவில் மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்க முடியாமல் அதிக ரூபாய் வசூல் தங்கிப் போயிருக்கிறது. ஆகவே, இந்த வருஷம் மாத்திரம் இந்தக் கடன் வசூலை நிறுத்தி வைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் மெம்பர் அவர்கள் கேட்ட முக்கிய கேள்விக்குப் பதில் சொல்லும் பொழுது, தனிப்பட்ட துறையிலே உள்ளவர்கள் எழுதின தகவல் தான் வந்திருக்கிறது. சொசைட்டிகளின் மூலம் இந்தக் கடன் வசூலை தள்ளிவைக்கவேண்டும் அல்லது ஒத்திவைக்கவேண்டும் என்ற தகவல் வரவில்லை. அந்த அடிப்படையில் தான் 'இல்லை' என்று பதில் சொன்னேன். தனிப்பட்டவர்கள் தான் எழுதினார்கள். அங்கு இருக்கும் 5 சொசைடிகள் என்ன நிலையில் இருக்கின்றன என்பது பற்றி எங்களுக்கு எழுதவேண்டும். அங்கு ஒரு